**M.C.O.P. NO.2141/2019**

**R.W.2** திரு.ராஜேந்திரன்

**Date : 14.06.2023**

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

02.08.2019ம் தேதி காலை 09.45 மணியளவில் நடந்த விபத்தில் சம்பந்தப்பட்ட லாரி பதிவு எண்.TN 47 L 5537 லாரியை நான் தான் ஓட்டிச்சென்றேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் சிங்கம்புணரி – திருப்பத்தூர் சாலையில் இடது ஓரமாக லாரியை நிறுத்தியிருந்தேன் என்று சொல்லியிருக்கிறேன், ஆனால் அந்த சாலையில் எந்த இடத்தில் லாரியை நிறுத்தியிருந்தேன் என்று சொல்லவில்லை. நான் ஓட்டிச்சென்ற லாரியின் பின்புறமுள்ள இடதுபுற விளக்கு சேதமடைந்துள்ளது என்றால் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் இடித்துவிட்டதால் விளக்கு சேதமானது. நான் லாரியை சாலையின் இடது ஓரமாக நிறுத்தியிருந்தால் இந்த விபத்து ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் லாரியை ஓட்டிச்சென்ற போது திடீரென்று நிறுத்தியதால் தான் பின்னால் வந்த இருசக்கர வானத்தை ஓட்டி வந்த இறந்து போன நபர் லாரியின் பின்புறம் மோதிவிட்டார் என்றால் சரியல்ல. எனது கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.